# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

## C.C. No.383/2017

## வழக்கு சாட்சி – அ.சா. 6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முனியாண்டி | ஜாதி | |
| தந்தை பெயர் | வீரணன் | தொழில் | லோடுமேன் வேலை |
| கிராமம் | தேனி | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | தேனி | வயது | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.02.2025.

**( 1வது எதிரி ஆஜர். 2 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை:–**

எதிரிகளை எனக்குத் தெரியும். கடந்த 2013 ம் வருடம் எனது மகன் பாண்டியனுக்கு இராணுவத்தில் வேலை வாங்கித் தருவதாக எதிரிகள் எங்களிடம் ஆண்டிபட்டியில் உள்ள விக்டர் ராஜா என்பவரது வீட்டில் வைத்து கூறினார்கள். மேலும் பணம் ரூ.2,00,000/– கொடுங்கள் என்றும் ராணுவத்தில் எங்களுக்குத் தெரிந்த பெரிய அதிகாரிகளை வைத்து அவர் என்னிடம் பயிற்சி மற்றும் தேர்விலும் பங்கு கொள்ளத் தேவையில்லை என்றும், நேரடியாக எங்களுக்குத் தெரிந்த பெரிய அதிகாரிகளை வைத்து வேலை வாங்கித் தருகிறோம் என்றும் கூறினார்கள். அதன்பின்னர் கோயம்புத்தூரில் நடந்த ராணுவ பணித்தேர்விற்கு எனது மகன் பாண்டியனையும், அவனுடன் மற்றும் சில நபர்களையும் காமராஜ், விக்டர் ராஜ் ஆகியோர்கள் அழைத்து சென்றார்கள். அதன்பின்னர் 5 மாதங்கள் கழித்தும் எனது மகனுக்கு வேலை கிடைக்கவில்லை. நான் ஏற்கனவே எதிரிகளிடம் ரூ.50,000/– கொடுத்திருந்தேன். மேலும் எதிரிகள் என்னிடம் பாக்கி பணமான

ரூ.1,50,000/–ஐ கேட்டார்கள். நான் அவர்களிடம் எனது மகன் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறான் அதனால், செலவு அதிகமாக உள்ளது, தற்போது பணம் இல்லை என்று தெரிவித்தேன். அதன்பின்னர் 1 மாதம் கழித்து எதிரிகள் என்னிடம் வந்து ஊட்டியில் ராணுவப் பணித்தேர்வு நடப்பதாக தெரிவித்தார்கள். அதன்பின்னர் நான் பாக்கி இருந்து ரூ.1,50,000/–ஐ சேகரித்து எதிரிகளிடம் கொடுத்தேன். எனது மகனை எதிரிகள் ஊட்டிக்கு அழைத்துச்சென்றார்கள். 2 நாட்கள் கழித்து எனது மகன் வீட்டிற்கு வந்தார். ஒரு வாரத்தில் பணிக்கான உத்தரவு வரும் என்று எதிரிகள் கூறியதாக எனது மகன் தெரிவித்தார். அதன் பின்னர் 5 மாதம் கழித்தும் எனது மகனுக்கு பணி உத்தரவு வரவில்லை. அதனால் நான் நேரடியாக ஆண்டிபட்டியில் உள்ள எதிரிகள் அனைவரிடமும் வேலை பற்றிக்கேட்டு, வேலை கிடைக்கவில்லை என்றால் நான் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுக்குமாறு கேட்டேன். அதற்கு எதிரிகள் வெட்டிவிடுவேன், குத்திவிடுவேன் என்று மிரட்டினார்கள். அதன்பின்னர் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கப்போகிறேன் என்று எதிரிகளிடம் தெரிவித்துவிட்டு வந்தேன். அதன்பின்னர் ராணுவ தேர்விற்காக சென்ற மற்ற நபர்கள் இதேபோன்று எதிரிகளிடம் பணம் கொடுத்து, பணி கிடைக்காமல் இருந்தவர்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள். அவர்களுடன் நானும் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.,</u>**

எதிரி தரப்பில் சாட்சியை விசாரணை செய்ய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யததால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.